அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு ஆனி-ஆடி ஜுலை 2018 முரசு 12 ஒலி 133



**கருணையும் சிவமே பொருள்எனக் காணும் காட்சியும் பெறுக மற்றெல்லாம்**
**மருள்நெறி எனநீ எனக்கு அறிவித்த வண்ணமே பெற்றிருக்கின்றேன்**
**இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம் எய்தியது என்செய்வேன் எந்தாய்**
**தெருள்நிலை இன்றிக் கலங்கினேன் எனினும் சிறுநெறி பிடித்ததொன்றிலையே.**

**- திருஅருட்பா**

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலையில்...

# பஞ்ச சுத்தி கிரியா

உடல்உறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
– அகவல்

"உடல் நலம், மன அமைதி பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ மூன்று நாட்கள்"



**இம்முகாமில்...**

- பஞ்ச சுத்தி முறை
- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- தியானம்
- பக்தி

**போன்றவை கற்றுத்தரப்படும்.**

ஆகஸ்ட்
10, 11, 12
2018

வெள்ளி, சனி & ஞாயிறு

நாம் பலபிறவிகளையும் தப்பி மேலான இந்த மனிதப்பிறப்பு எடுத்தது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளைப் பெறுவதற்கே – வள்ளலார்.

**இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,**
வாயு லிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,
திருவண்ணாமலை.

## பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. அன்பர்கள் ஆகஸ்ட் 9 வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. பயிற்சியில் கலந்து கொள்வோர் 18-60 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
3. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் மேலும்
   ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்துவரவும்.
   குறிப்பு எடுக்க நோட்டு பேனா மற்றும் ஏர் பில்லோ எடுத்துவரவும்.

**சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி**

**உங்கள் ஆரோக்கியத்திற்கான முதலீடு ரூ. 1,500/-**

30 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவிற்கு:

**88385 40176, 89403 96760**





# திருச்செவிக்கு விண்ணப்பம்

திருஅருட்பா பக்திப் பாமாலை

## திருப்பள்ளி எழுச்சி

துற்குண மாயைபோய்த் தொலைந்தது;
ஞானம் தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான்
சிற்குண வரைமிசை உதயம் செய்தது
மாசித்திகள் அடிப்பணி செய்திடச் சூழ்ந்த
நற்குணச் சன்மார்க்க சங்கத்தார் எல்லாம்
நண்ணினர் தோத்திரம் பண்ணி நிற்கின்றார்
எற்குண வளித்தஎன் அருட்பெருஞ்ஜோதி
என்அம்மையே பள்ளி எழுந்தருள்வாயே.

## பிள்ளைப் பெருவிண்ணப்பம்

பயம்துயர் இடர்உள் மருட்சியாதிய இப்பகை
எலாம் பற்றறத் தவிர்த்தே
நயந்தநின் அருளார் அமுதளித்து அடியேன்நாடி
ஈண்டு எண்ணிய எல்லாம்
வியந்திடத் தருதல் வேண்டும் ஈதுஎனது
விண்ணப்பம் நின்திரு உளத்தே
வயந்தரக் கருதித் தயவுசெய்து அருள்க
வள்ளலே சிற்சபை வாழ்வே.

## பரசிவ நிலை

அருட்ஜோதி தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்
பொருட்சாரும் மறைகள்எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்த தெய்வம் உயர் நாதாந்த தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவாறு எனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வம்அதே தெய்வம்.

திருச்சிற்றம்பலம்



# விட்டுவிடு



"நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லை. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்பது ஔவை வாக்கு. ஆக, இந்த இரண்டு அருள் மொழிகளிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், சிந்தித்துச் செயல்பட்டால் வாழ்க்கை சுகமாக அமையும் என்பதே. அந்த வகையில், நாம் அனைவரும் சுகமாக வாழ இம்மாதம் அற்புதமான சிந்தனையொன்றை இங்கே பதிவு செய்கிறோம்.

ஒருநாள் கையில் மலர்களை ஏந்தியவாறு அரசன் ஒருவன் புத்தரிடம் வந்தான். அந்த மலர்களைக் கண்ட புத்தர், "விட்டுவிடு" என்றார்.

அவன் உடனே இடது கையிலுள்ள மலர்களை போட்டு விட்டான். "புத்தரின் எதிரில் இடது கையில் மலர்களைக் கொண்டு வருவது தவறோ என்னவோ!" என்று அவன் நினைத்தான். காரணம், இடது கரம் என்பது தவறாக எண்ணப்பட்டு வருகிறது. வலது சரியானது. எனவே, இடது கையால் எதையும் தரக் கூடாது என்று சொல்லப்படுகிறது. ஆகையால், குற்ற உணர்வால் அதை அவன் போட்டுவிட்டான்.

புத்தர் சிரித்தவாரே மீண்டும், "விட்டு விடு" எனக் கூறினார். அவன் உடனே தன் வலது கரத்தில் உள்ள பூக்களையும் போட்டுவிட்டு குழம்பி நின்றான்.

இரண்டு கரங்களும் வெறுமையான பிறகு புத்தர் உரக்க சிரித்துவிட்டு மீண்டும், "விட்டுவிடு" என்றார்.

இப்போது, அங்கே விடுவதற்கென்று ஒன்றுமே இல்லை. எனவே, அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். என்ன செய்வது என்று அவனுக்குத் தோன்றவில்லை.

இப்போது ஆனந்தர், "புத்தர் சொன்னதற்கு அர்த்தம் மலர்களை விட்டு விடுவதல்ல. மலர்களைக் கொண்டு வந்தவனை விட்டுவிடுவது. நீ, மலர்களை விட்டு விடுவதால் எந்த மாறுதலும் ஏற்படப் போவதில்லை. உன்னையே நீ ஏன் விட்டுவிடக் கூடாது?" என்றார்.

அந்த அரசன் உடனே புரிந்து கொண்டு புத்தரின் கால்களில் விழுந்து வணங்கி அவரின் சீடரானான்.

அவன் மீண்டும் திரும்பி தன் இடத்திற்குச் செல்லவே இல்லை. அவனுடைய பிரதான மந்திரி அவனிடம் வந்து, "தாங்கள் என்ன

*செய்கிறீர்கள்? எல்லாவற்றயையும் துறந்துவிட தாங்கள் விரும்பினாலும் சிலவற்றை சீர்படுத்த சிறிது நேரமாவது ஒதுக்க வேண்டுமே. திரும்பி வாருங்கள். உங்கள் மனைவி, மக்கள், உங்கள் அரசாங்கம், அதன் விவகாரங்கள் இவற்றுக்கெல்லாம் கொஞ்ச நேரமாவது தாருங்கள். எல்லாவற்றையும் துறந்துவிட தாங்கள் தீர்மானித்து விட்டாலும் அவ்வளவு அவசரம் ஏன்?'' என்றான்.*

*அதற்கு அந்த அரசன், "நீ, துறத்தலை புரிந்து கொள்ளும்போது எல்லாம் 'உடனே' என்பதை அறிந்து கொள்வாய். நீ அதனைப் புரிந்து கொள்ளாவிட்டால் அது எப்போதும் தள்ளிக் கொண்டே போகும்'' என்றான். உண்மைதான். 'விடுதல்' என்பது உடனடியாக நடக்க வேண்டிய செயல். அறியாமை மட்டுமே தாமதமாகச் செல்லும். அறியாமையின் ஒரு யுக்திதான் தாமதம். "அதை நான் நாளைக்குச் செய்கிறேன்'' என்பதே அதன் சூழ்ச்சி. இவ்விதம் சிந்தித்து செயல்பட்டால் வாழ்வில் எப்போதும் மகிழ்ச்சி.*

**"பிற்படுமோர் பொய்விட்டு மெய்ந்நெறியைப் போற்றி**
**தற்போதத்தை கைவிட்டு உணர்வே கடைபிடித்து"**

**"தேர்விலாச் சிறிய பருவத்திற்றானே தெய்வமே தெய்வமே**
**எனநின் சார்வு கொண்டு எல்லாச் சார்வையும் விடுத்தேன்"**

*என்ற திருஅருட்பா வரிகள் விட்டுவிடுதல் என்பது உடனே நடக்கவேண்டிய நிகழ்வு என்பதை விளக்குவதாய் அமைந்துள்ளது.*

*விவசாயி ஒருவர் தினமும் வாழைப்பழங்களை வாய் குறுகிய ஒரு கண்ணாடி ஜாடியில் போட்டு வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.*

*இதை அவர் வீட்டின் அருகிலுள்ள மரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குரங்கு ஒன்று அந்த விவசாயி பழத்தை ஜாடியில் போட்டுவிட்டு சிறிது தொலைவு சென்றவுடன் கீழே இறங்கி வந்து அந்த ஜாடியில் கையை விட்டு பழங்களை எடுத்துக் கொண்டு ஓடிவிடும். இதை கவனித்த விவசாயி, எவ்வாறு தடுப்பது என்று யோசித்தார். அடுத்தநாள், இன்னும் வாய் குறுகிய கண்ணாடி ஜாடியை வாங்கி வந்து, அதில் ஒவ்வொரு பழமாக உள்ளே அழுத்தினார். பிறகு, வீட்டின் ஒரு ஓரத்தில் மறைந்திருந்து பார்த்தார்.*

*அந்த குரங்கு மரத்திலிருந்து கீழே இறங்கி வந்து ஜாடியின் உள்ளே கையை விட்டு பழத்தைப் பிடித்தது. அந்த ஜாடியின் வாய்ப் பகுதி குறுகியதாய் இருந்ததால் கையையும், பழத்தையும் சேர்த்வாறு வெளியே எடுக்க முடியவில்லை.*

*அச்சமயம் அந்த விவசாயி குரங்கின் அருகே வந்து குச்சியால் ஒரு அடி கொடுத்தார். குரங்கு வலியால் கத்தியது.*

அந்த குரங்கு எவ்வாறு தப்பிக்கும்? அது தப்பிக்க ஒரே வழி பழத்தை விட்டுவிடுவதுதான். ஆனால், அதற்கு வாழைப்பழத்தின் மேல் மிகுந்த ஆசை இருந்ததால் பழத்தை விட்டுவிடாமல் அடி வாங்கிக் கொண்டே இருந்தது.

இந்த கதையில் குரங்கும், வாழைப்பழமும் வேறுவேறானவை. வாழைப்பழம் குரங்கின் உடம்பில் ஒரு அங்கமல்ல. குரங்கு நினைத்தால் பழத்தை விட்டுவிட்டு அந்த இடத்தை விட்டு ஓடிவிட முடியும். ஆனால், அதன் ஆசையினாலும் குழப்பத்தினாலும் பழத்தை விடமுடியாமல் மாட்டிக் கொண்டது. இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், **குரங்கு மாட்டிக் கொள்ளவில்லை; அதன் ஆசைதான் அதை சிக்கவைத்து அடியையும் வாங்கித் தந்தது.**

நாமும் நம் வாழ்க்கையில் நம்மிலிருந்து வேறான பலவற்றை பிடித்துக் கொண்டிருக்கிறோம். அவற்றால் நமக்கு துன்பம் நேர்ந்தாலும் அவற்றின்மேல் கொண்ட ஆசையினால் விடமுடியாமல் தவிக்கிறோம். **“ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்; ஆசை விடவிட ஆனந்தமாமே”** என்ற திருமூலர் வாக்கு இங்கு கருதற்குரியது.

குரங்கு, அந்த வாழைப்பழத்தை விட்டால் மட்டுமே அதன் துன்பத்திலிருந்து விடுபட முடியும். அதுபோல், நாமும் நமக்குத் தேவையில்லாதவற்றை விட்டுவிட்டால் மட்டுமே துன்பம் நீங்கி இன்பமாக வாழலாம். சரி, எப்படி விடுவது? இதற்கு நம் பெருமானார் நல்வழி காட்டுகின்றார்.

**“ஒரு வஸ்துவினிடத்தில் பற்றுதல் அவா; அதை அனுபவிக்க வேண்டும் என எழுந்தது ஆசை; அதன் மயமாதல் காமம்; அதைத் தன்வசப்படுத்த எழுவது மோகம்.”**

இதை உற்று நோக்கும்போது, ஆசையினால் நமக்குத் துன்பம் ஏற்படுவதில்லை; ஒரு பொருளின் மீதோ அல்லது நபரின் மீதோ நாம் கொண்ட பற்றே நம் ஆசைக்கு காரணம் என்பது தெள்ளத் தெளிவாக புரிகின்றது. இந்த ஆசையே துன்பத்திற்கு வித்தாகின்றது.

சரி, இந்த பற்றை எவ்வாறு விடுவது? இஃது நம் கையில் இல்லையே என தாம் வினவுவது உண்மைதான். ஆனால் அதற்கும் நம் கருணை வள்ளல் வழி கூறியுள்ளார்.

**பற்றிய பற்று அனைத்தினையும் பற்றற விட்டு**

**அருள் அம்பலப் பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே** என்ற அருட்பா வரிகள் எண்ணத்தக்கவை.

**நாம் எல்லோரும் நம் மனதிற்கு ஒன்றை புரியவைக்க வேண்டும். பொதுவாக பற்று எதன் காரணமாக உருவாகின்றது? வெளிப்**

**பொருட்களில் இன்பம் இருப்பதாக தொடர்ந்து நினைப்பதுதான் காரணம். ஆனால், உண்மையில் வெளிப் பொருட்களில் இன்பம் இல்லை என்பதே உண்மை.** இதை நம் பெருமானாரும்

**"துட்ட வஞ்சக நெஞ்சமே ஒன்று சொல்லக் கேள்**
**கடல்சூழ் உலகத்தில் இட்டம் என்கொல் இறையளவேனும்**
**ஓர் இன்பம் இல்லை"** *என்கிறார். (இறையளவு – சிறிதளவும்)*

*பிறகு எங்குதான் நாம் தேடும் இன்பம் இருக்கிறது என்ற வினாவிற்கு,* **"இன்ப அனுபவ உருவாய் என்னுள் ஓங்கி"** *என்ற அருட்பா வரிகள் கடவுளிடத்தில்தான் நாம் தேடும் இன்பம் இருக்கிறது என்பதை உணர்த்துகின்றது.*

*ஆக, இல்லாத இடத்தில் இன்பத்தை தேடுவதை விட்டு இருக்கும் இடத்தில் தேட வேண்டும். மேலும், ஜீவனின் இயல்பு ஏதாவது ஒன்றைச் சார்ந்து வாழ்வதே. அதை* **"பராதீனன்"** *என்று சொல்லுவார் நம் பெருமானார். நிலையில்லாததைச் சார்வதை விட்டு, நிலைத்த இன்பத்தை அளிக்கும் இறைவனைச் சரணடைந்து தூய வாழ்க்கை வாழவேண்டும். இதை மேலும் விளக்க பின்வரும் திருஅருட்பாவைக் காண்போம்.*

<u>கருணையும் சிவமே பொருள்எனக் காணும் காட்சியும் பெறுக</u> மற்றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கு அறிவித்த வண்ணமே பெற்றிருக்கின்றேன்
இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம் எய்தியது என்செய்வேன் எந்தாய்
தெருள்நிலை இன்றிக் கலங்கினேன் எனினும் சிறுநெறி பிடித்ததொன்றிலையே.

*"எம் தந்தையான இறைவனே! உயிர்க்கு இரங்கும் இரக்கமும், சிவமுமே உறுதிப் பொருள் என்னும் அறிவு பெறுக. மற்றவை யாவும் மயக்க நெறி என்று அறிவுறுத்தியபடியே இருக்கின்றேன். குற்ற நெறியைக் காட்டும் மாயை கன்மங்களால் என் அறிவில் கலக்கம் ஏற்படுகின்றது என் செய்வேன்! தெளிவான அறிவு பெறாது கலக்கம் உற்றேன். ஆயினும் கீழான நெறியை யான் கைக் கொண்டதில்லை" எனப் பாடுகின்றார்.*

முடிவாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், நம் துன்பத்திற்குக் காரணமான பற்றுக்களை விடவேண்டும்; அதற்கு வெளிப் பொருட்களிலோ நபர்களிடமோ இன்பம் இல்லை என்பதை உணர்ந்து இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும். இதற்கு நம் பெருமானார் இரண்டு சாதனங்களை அருளியுள்ளார். ஒன்று கருணை, மற்றொன்று சிவம். கருணை என்பது கேடயம்; சிவம் என்பது வாள். இதைக் கொண்டு நமக்கு ஏற்படும் துன்பத்தினின்று நம்மைக் காத்துக் கொள்ளலாம்.



# ஏழையின் சிரிப்பில் வள்ளலார்

ஆ. திருமேனி.

உதவி பேராசிரியர், தமிழியல் துறை, அண்ணாமலை பல்கலைக் கழகம்.

உலகம் தோன்றிய காலம் முதல் இன்றளவும் மனிதன் உழைப்பது பசிப்பிணியை போக்கிக் கொள்ளத்தான். அவன் விண்ணில் பறந்தாலும், கடலில் மூழ்கிச் சாதனைகள் பல செய்தாலும் மற்ற எந்த காரியங்களைச் செய்தாலும் பசியென்று வந்துவிட்டால் அதற்கே முக்கியம் தருவான். அப்பசிப்பிணியை வள்ளலார் எங்ஙனம் போக்க முயன்றார் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பசிவந்தால் ஒருவனது வாழ்க்கை எப்படித் துயருறும் என்பதை மணிமேகலை,

**"குடிப்பிறப்பு அழிக்கும்; கொல்லும்;**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்;**
**நாணணி களையும்; மாணெழில் சிதைக்கும்;**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி என்னும் பாவி "** என்று கூறுவதனின்று உணரலாம்.

பசிப்பிணி ஒருவரின் குடிப்பிறப்பினால் வந்த தகுதியை அழித்துவிடும். தூய்மையான இயல்புகளைச் சிதைத்துவிடும். வாழ்வுக்குப் பற்றுக்கோடாக இருக்கும் கல்வியினையும் நீக்கிவிடும். மேன்மை பொருந்திய அழகினை எல்லாம் சீர்குலைக்கும். அத்தகைய பசியாகிய கொடுமையைப் போக்க வேண்டும். அங்ஙனம் போக்குபவர்களை பற்றி எழும் புகழ்மொழிகளை அளவிட்டுக் கூறுவதற்கு என் நாவும் நிமிராது. அத்துணை அளவிறந்த புகழுடைய செயல் அதுவாகும் என்று விளக்குகிறது.

நம் திருவள்ளுவப் பெருந்தகையும் திருக்குறளில் இப்பசிப்பிணி போக்குவோரை யோகியினும் உயர்வுடையோர் என உயர்த்திக் கூறுகின்றார்.

**ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின். – ஈகை; குறள் 225**

தவ வலிமை உடையவரின் வலிமை பசியை பொறுத்துக் கொள்வதாகும். அதுவும், அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும்.

*"பசி வந்தால் பத்தும் பறந்துபோகும்" என்பதை ஔவையார் மிகவும் சிறப்பாகப் படியுள்ளார்.*

**"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை-தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திடப் பறந்துபோம்"** *என்பதாகும்.*

*பசி வந்தால் மானம் போகும், குலம் போகும், கல்வி போகும், ஈகை போகும், அறிவுடைமை போகும், தானம் தவம் போகும், உணர்ச்சி போகும், தாளாண்மை போகும், தேனினும் இனிய சொற்களையுடைய பெண்களின்மேல் கொண்ட காதலும் போகும். இவை பத்தும் பறந்து போகும் என்பதை மிகவும் ஆழமாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.*

*புறநானூற்றில் குடபுலவியனார் என்னும் புலவர்,*

**"நீர் இன்று அமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தோடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே."**

*என்னும் பாடலில் உணவு படைத்தலின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார். நீரின்றி வாழ முடியாத இவ்வுலகில் உடல் பசி நீங்க உணவு கொடுப்பவர்கள் அவ்வுடலுக்கு உயிர் கொடுத்தவர்கள் ஆவார்கள். எனவே, உடலுக்கு உணவு உயிர் போன்றதாகும். உணவு எனப்படுவது நிலத்தொடு சேர்ந்த நீர் ஆகும். எனவேதான், நீரும் நிலமும் திருத்தி விளைவுக்கு உதவியவர்கள் உயிரும் உடலும் படைத்தளித்து காப்போர் என்னும் புகழுக்கு உரியவர்கள் ஆகின்றனர்.*

*திருஅருட்பா வசனபாகத்தில் பசியின் அவத்தையை நம் பெருமானார், "பசி என்கிற நெருப்பானது, ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் ஜீவகாருண்யம்" என்று உருக்கமாக விளக்குகிறார். பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை என எழுவகைத் துன்பத்தைப் போக்குவது ஜீவகாருண்யம் என வகுத்தவர் பசித் துன்பத்தைப் போக்குவதே மிகமிக முக்கியம் என்கிறார். "பசி என்கிற விஷம் தலைக்கேறிச் ஜீவர்கள் மயங்கும் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கம் தெளியச் செய்வதே ஜீவகாருண்யம்" என்று கூறுவதால் இஃது விளங்கும்.*

*ஜீவகாருண்யத்தின் திருவுருவமாகிய நம் வள்ளல் பெருமான் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார். பசியினால் இளைத்து வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்த வெற்றரைக் கண்டு உளம் பதைத்தார். உலகில் மாந்தர் பசியால் களைத்துப் பட்டினியுற்றுப் பரிதவிக்கின்றார் என்று கேட்டபோதெல்லாம் உளம் பகீர் என்று நடுங்குற்றார். பசியெனில் வள்ளல் பெருமானின் உள்ளம் நடுங்கும்.*

**“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடுதோறிரந்தும் பசியறாது அயர்ந்த**
**வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன்”** *என்னும் பாடல் அவரின் உள்ளத்தினைத் தெளிவாய் படம்பிடித்துக் காட்டுகின்றது.*

**“பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்; பழுங்கஞ்சியாயினும் வழுங்கவும் நினையீர்”** *என்னும் வரிகளில் பசியால் ஏங்கித்தவிக்கும் ஏழைகளின் கொடுமையைக் கண்ட வள்ளல் பெருமான் தன் உள்ள பதபதைப்பை,*

**“உள்ளலேன் உடையார் உண்ணுவும் வறியார்**
**உறுபசி உழுந்து வெந்துயரால்**
**வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ**
**மற்றிதை நினைத்திடுந் தோறும்**
**எள்ளலேன் உள்ளம் எரிகின்றது உடம்பும்**
**எரிகின்றது என்செய்வேன் அந்தோ**
**கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்**
**குறையெலாம் தவிர்ந்தருள் எந்தாய்”** *என வருந்துகின்றார்.*

*வள்ளல் பெருமானார் சமரச சுத்த சன்மார்க்கம் என்ற ஒரு தனி மார்க்கத்தை உருவாக்கி அதன் அடிப்படைக் கொள்கை ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்றார். அந்த உரிமையை வெளிப்படுத்தும் விதமாக ஜீவகாருண்ய ஒழுக்கத்தைத் தந்தார். இதன் உயரிய செயல்பாடாக பசி தவிர்த்தலையும், கொலை தவிர்த்தலையும் வகுத்தார். இதுவே பரஜீவகாருண்யம். இந்த பர ஜீவகாருண்யத்தால் எந்த தரத்தவரும் இறைவனது அருளை பரிபூரணமாகப் பெற்று மோட்சமென்கிற மேல் வீட்டுக் கதவை திறந்து உள்ளே புகுந்து எல்லையிலா இன்பத்தில் வாழலாம் என அருளிச் செய்தார்.*

*நாம் எல்லோரும் வள்ளல் வழிநின்று உய்வடைவோமாக!*

**ஜீவகாருண்யம் உண்டானால் அன்புண்டாகும்; அன்புண்டானால் அருள் உண்டாகும்; அருள் உண்டானால் சிவானுபவம் உண்டாகும். – வள்ளலார்.**

# குருவின் சந்நிதியில்

குருட்ஜீப் என்கிற மேலைநாட்டு தத்துவ அறிஞரின் மிகச்சிறந்த சீடரான உஸ்பென்ஸ்கி தன்னுடைய "அற்புதங்களின் தேடல்" என்ற நூலில் தன் குருவிற்கு "என்னுடைய கனவுகளை எல்லாம் நிர்மூலமாக்கிய அந்த மனிதருக்கு!'' என்ற வார்த்தைகளால் சமர்ப்பணம் செய்துள்ளார்.

பொதுவாக, நம் கனவுகளை அழித்தொழிக்கும் அத்தகைய நபர்களை நாம் விரும்புவதேயில்லை. இந்த சீடரும் தன் குருவை விட்டு வெளியேற வேண்டியதாகி விட்டது. அவரைப் பார்க்க கடைசி காலத்தில்கூட அவர் வரவேயில்லை. அவர் தன் காரியங்களை சுயமாக ஆரம்பித்து விட்டார். கடைசியில், குருவிற்கு அவர் ஒரு பகைவனாகவே இறக்க நேர்ந்தது.

மிகச்சிறந்த சீடரும்கூட, கனவுகளையெல்லாம் நிர்மூலமாக்கும் திறம்படைத்தவர் தன் குரு என அறிந்திருந்தும் அவரை விட்டு விலக வேண்டியதாக இருந்தது. அப்படியிருக்க, நம் கனவுகளை எல்லாம் உண்மையாகவே அழித்து நாசமாக்கிக் கொண்டே செல்கின்ற மனிதரைக் கண்டால் நமக்கு பகைவராகவே தோன்றுவார்.

ஒரு உண்மையான குருவானவர் எப்போதும் ஒரு பகைவனைப் போலவே காட்சி தருவார். இதுவே அடிப்படைத் தத்துவம். தவறான ஒரு குருதான் நாம் கனவு காண உதவி புரிவார். நம் கனவுகளை அவர் எப்போதும் குலைக்க மாட்டார். அதற்கு நேர்மாறாக நமக்கு ஆறுதலையும், அமைதியையும் வழங்குவார். அவருடைய போதனை அழகான ஒரு தாலாட்டுப் பாடலைப் போன்றிருக்கும். நாம் நன்றாக உறங்க வேண்டும் என்பதற்காகவே நம்மைச் சுற்றி பாட்டுப் பாடுவார்.

உண்மையான குரு என்பவர் ஆபத்தானவர். அவர் முன்னால் போவதென்பதே மிக ஆபத்தானது. அவரை நோக்கிச் செல்வது உங்கள் துணிவைப் பொறுத்தது. காரணம், அவர் நம்மைக் கனவு காண விடமாட்டார். கனவில் மிதக்க உதவி புரியமாட்டார்.

நம் இதயத்திற்கு மிக அருகில் உள்ளவை நம் கனவுகள். நம் கனவுகளே நம் இதயம் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். நம் கனவுகள் சிதைந்ததும் நாமே அழிந்து விட்டதாக உணர்கிறோம். ஒருசாரார் இதனை அறிந்துள்ளனர்.

எனவே அவர்கள் "உண்மையான குருவானவர் ஒரு மரணத்தைப் போல" என்கின்றனர்.

நாம் குருவைத் தேடிச் சென்றால் அது நம் மரணத்தைச் தேடிச் செல்வதாகும். ஏனெனில் நாம் மரணிக்காதவரை நம்மால் மீண்டும் மாற்றிப் பிறக்க முடியாது. **"மாற்றிப்பிறக்கும் வகையறியேன்"** என்ற அருணகிரிநாத சுவாமிகளின் வரிகள் இங்கு எண்ணத்தக்கது. **நம் கனவுகள் அழியும்போது உண்மைகள் இருப்பு நிலைக்கு வருகின்றன.** உண்மைகள் வெளிப்பட ஆரம்பிக்கின்றன.

**வான்காணா மறைகாணா மலரோன் காணான்**
**மால்காணான் உருத்திரனும் மதித்துக் காணான்**
**<u>நான்காணா இடத்து</u> அதனைக் காண்பேம் என்று**
**நல்லோர்கள் நவில்கின்ற நலமே**

என்ற அருட்பா பாடலில் வானோர்களும், மறைகளும், பஞ்ச கர்த்தாக்களும் காண முடியாத கடவுளை 'நான்' என்கிற அகந்தை அழிந்தால்தான் காண முடியும் என்கிறார்.

பொதுவாக, தன்முனைப்பை அதிகப்படுத்துகின்ற மனிதனையே நாம் விரும்புகிறோம். நாம் ஒருவரை நேசிப்பதற்குக் காரணம் அவர் நம்மை முழுமையான மனிதன் என்று கூறுவதால்தான். நம்முடைய உண்மை நிலையை சொல்பவரைக் காணவும் விரும்புவதில்லை.

**'நான்' என்பது நமக்கு விபரீத அறிவையும் திரிபுணர்ச்சியையும் கொடுக்கிறது. இந்த தேகமே நான் என்று நினைப்பது விபரீத அறிவு. நிலையில்லாத இவ்வுலகை நிலையென நினைப்பது திரிபுணர்ச்சி. இதனால், நமக்கு அஞ்ஞானம் மேலோங்கி மயக்கத்தைத் தருகின்றது. எனவேதான், நாம் கனவுலகில் சஞ்சாரம் செய்து கொண்டே வாழ்கிறோம். இவை எல்லாவற்றிற்கும் மூல காரணம் 'நான்'.**

ஒருவர் சக்கரவர்த்தி ஆவது ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் நிகழக்கூடும் என்றும் அவர் ஒரு தனிப்பிறவி என்றும் அப்படிப்பட்ட சக்கரவர்த்தியானவர் இறந்தால் அவருக்கு சொர்க்கத்தில் தனிப்பட்ட மரியாதைகளுடன் வரவேற்பு அளிக்கப்பட்டு, சிறப்பான இடம் கொடுக்கப்படும் என்றும் சொல்லப்படுவதுண்டு.

சொர்க்கத்தில் இமயமலையைப் போன்ற ஒரு மலை உண்டு எனவும் இதைவிட உயர்ந்த, சிறந்த, அழகான மலை வேறெங்குமே இல்லை எனவும் சில மத நூல்களில் கருதப்படுகின்றது. இமயமலை பாறைகளாலும், மண்ணாலும், பனியாலும் உருவாக்கப்பட்டது. ஆனால் சொர்க்கத்தில் இருக்கும் இந்த மலையோ தங்கத்தால் ஆனது. அதில் பாறைகளுக்குப்பதில் வைரங்களும், பவளங்களும்,

மரகதங்களும் உள்ளன. சக்கரவர்த்தி ஒருவர் இறந்தால் அவரது பெயர் அந்த மலைமீது பொறிக்கப்படும்.

அப்படியொரு சக்கரவர்த்தி இறந்த சமயம் அவரது பெயரை அந்த மலை மீது பொறிப்பதற்காக அவரை அழைத்துச் சென்றார்கள். அதுவொரு அரிதான தருணம். அது ஆயிரம் வருடங்களில் ஒருமுறையே நிகழும். இந்த மன்னன் அந்த பொன்மலை மீது தான் தன் பெயரை பொறிக்கப்போவதை எண்ணி மிகவும் மனக்கிளர்ச்சியடைந்தான். இதுவரை இருந்த மிகச் சிறந்தவர்களில் தான் ஒருவனாகப் இருப்பதோடு, வரப்போகிற சிறந்தவர்களுக்கும் ஒரு பாடமாக, வழிகாட்டியாக இருக்கப்போவதாக நினைத்தான்.

அங்கிருந்த வாயில் காவலன் மலைமீது அவரது பெயரை பொறிப்பதற்குத் தேவையான கருவிகளை கொடுத்தான்.

சக்கரவர்த்தி வாயிற்காப்பாளனிடம் "தன்னந்தனியே போய் என் பெயரை பதித்துவிட்டு வருவதில் என்ன சந்தோஷம் இருக்கிறது. அங்கு அதைப் பார்க்க யாருமே இல்லாவிடில் எப்படி மகிழ்ச்சி வரும். எனவே, என்னுடன் இன்னும் சிலரை கூட்டிச் செல்ல விரும்புகிறேன். என் வாழ்நாள் முழுவதும் உடனிருந்து எனது வெற்றிக்குத் துணை நின்ற என் மனைவி, அமைச்சர், தளபதி இவர்கள், நான் இறந்தபோது நானின்றி வாழ முடியாது என்று தற்கொலை செய்துகொண்டு உயிர்விட்டவர்கள். இவர்களையும் அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும்" என்று கேட்டான்.

அதற்கு அந்த வாயிற் காப்பாளன், "என்னுடைய பேச்சை தயவுசெய்து கேளுங்கள். நான் இங்கே பரம்பரை பரம்பரையாக வாயில் காப்பாளனாக இருக்கிறேன். எனவே இவர்கள் யாரையும் அழைத்துச் செல்லாதீர்கள். பிறகு வருத்தப்படுவீர்கள். இவர்களை அழைத்துச் செல்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. பின்பு அங்குள்ள நிலைமையைக் கண்டு ஒருகால் காண்பிக்க வேண்டாம் என நீங்கள் நினைத்தாலும் முடியாது. எனவே, நீங்கள் மட்டும் சென்று உங்கள் பெயரை பொறித்துவிட்டு வாருங்கள். இவர்கள் அதைப் பார்க்கத்தான் வேண்டும் என நீங்கள் நினைத்தால் பின்பு, அவர்களை உள்ளே அழைத்துச் செல்லுங்கள். பிறகு உங்கள் விருப்பம்" என்றான்.

இது சரியான யோசனையாகத் தோன்றியதால், மன்னன் மட்டும் தனியாகச் சென்றான். ஆயிரம் சூரியன்களுக்கு அடியில் தகதகத்துக் கொண்டிருந்த தங்க மலையைக் கண்டான். சக்கரவர்த்தியால் கண்களை திறக்கவே முடியவில்லை.

அவ்வளவு தகதகப்பு. பின் மெதுவாக கண்களை பழக்கப்படுத்திக் கொண்டு தனது பெயரை பொறிக்க சரியான ஒரு இடத்தைத் தேடினான். ஆனால், அவன் மிகவும் வியப்படைந்தான்.

அங்கு இடமே இல்லை. மலை முழுவதும் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவனால் தனது கண்களையே நம்ப முடியவில்லை. முதல் முறையாக அவன், தான் யாரென்று உணர்ந்தான்.

இதுவரை ஆயிரம் வருடங்களில் ஒருமுறை மட்டுமே உருவாகக் கூடிய சிறப்பான மனிதனாக தன்னை நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் காலம் முடிவற்றது. அதில் ஆயிரம் வருடங்கள் என்பது எந்தப் பெரிய மாறுதலையும் ஏற்படுத்தி விடாது. அதுவொரு பொருட்டே அல்ல. அதனால், ஏகப்பட்ட சக்ரவர்த்திகள் ஏற்கனவே இருந்திருக்கிறார்கள். அவ்வளவு பெரிய மலையில் இவனுடைய சிறிய பெயரை எழுத இடமேயில்லை.

யாரையும் தன்னோடு அழைத்துச் செல்ல வேண்டாம் என காவலாளி தடுத்தது ஏனென இப்போது புரிந்தது. அவர்கள் இந்தக் காட்சியை பார்க்காமல் இருந்தது நல்லது. தங்களது சக்கரவர்த்தி ஒரு அரிய பிறவி என்றே அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கட்டும்.

அவன் காவலாளியை உள்ளே தனியே அழைத்து அங்கே இடமே இல்லை என்பதைக் கூறினான். காவலாளி, “இதைத்தான் நான் உங்களிடம் கூறினேன். நீங்கள் சில பெயர்களை அழித்துவிட்டு உங்களது பெயரை எழுதிவிட்டு வாருங்கள். அப்படித்தான் இதுவரை வந்தவர்கள் செய்திருக்கிறார்கள். எனது தந்தை, தாத்தா ஏன் என் பரம்பரையில் யாருமே இந்த மலை காலியாக இருந்தோ, சிறிதளவு இடம் இருந்தோ பார்த்ததில்லை. அதனால் சில பெயர்களை அழித்துவிட்டு தங்கள் பெயரை பொறித்து விடுங்கள். பிறகு உங்கள் உறவினர்களை அழைத்துச் சென்று காண்பியுங்கள்” என்றான்.

அதற்கு அந்த மன்னன், “இல்லை, நான் என்னுடைய பெயரை பொறிக்கவும் விரும்பவில்லை. இவர்களிடம் காட்டவும் விரும்பவில்லை. அதனால் என்ன பயன்? என்றாவது ஒருநாள் யாராவது ஒருவர் வந்து அதை அழிக்கப் போகிறார். என்னுடைய முழுவாழ்வும் இப்போது பொருளற்றதாகிவிட்டது. சொர்க்கத்தில் உள்ள இந்த பொன்மலையில் எனது பெயர் பொறிக்கப்படும் என்பதுதான் எனது ஒரே நம்பிக்கையாக இருந்தது. இதற்காகவே நான் வாழ்ந்தேன்.

இதற்காகவே நான் என் வாழ்க்கை முழுவதையும் பணயம் வைத்தேன். ஆனால், இப்போது வேறு யார் வேண்டுமானாலும்

*வந்து எனது பெயரை அழித்துவிட்டு தங்களது பெயரை எழுதக்கூடும் எனும்போது அதில் எழுதுவதில் என்ன பொருளிருக்கிறது? நான் இதில் எழுதப்போவதில்லை'' என்றான்.*

*காவலாளி சிரித்தான். சக்ரவர்த்தி, "ஏன் சிரிக்கிறாய்" எனவினவ, காவலாளி, "பல சக்ரவர்த்திகள் வந்து இதைப் பார்த்துவிட்டு, கேட்டுவிட்டு தங்கள் பெயரை எழுதாமல் திரும்பிப் போன கதையையும் நான் எனது தாத்தாவிடமிருந்து கேட்டிருக்கிறேன். நீங்கள் மட்டுமல்ல, சிறிதளவாவது புத்திசாலித்தனம் உள்ள யாரும் இதையேதான் செய்வர்'' என்றான்.*

**ஆற்றுவெள்ளம் வருவதன்முன் அணைபோட அறியீர்**
**அகங்காரப் பேய்பிடித்தீர் ஆடுதற்கே அறிவீர்**
**கூற்றுவருங்கால் அதனுக்கு எதுபுரிவீர் ஐயோ**
**கூற்றுதைத்த சேவடியை போற்ற விரும்பீரே**
**வேற்றுரைத்து வினைபெருக்கி மெலிகின்ற உலகீர்**
**வீணுலகக் கொடுவழக்கை விட்டுவிட்டு வம்மின்**
**சாற்றுவக்க எனது தனித்தந்தை வருகின்ற தருணம்**
**இதுசத்தியம் சிற்சத்தியை சார்வதற்கே. – உறுதி கூறல்**

*ஆற்றில் வெள்ளம் பெருகி வருவதற்கு முன்பே காத்துக் கொள்ள எண்ணாத உலகீர்! அகந்தை என்னும் பேய் பிடித்து அலைந்து வருந்துகின்றீர். நாளை எமன் வரும்போது என்ன செய்வீர்? அந்தோ, அந்தக் கூற்றுவனை உதைத்து நீக்கிய இறைவனுடைய சிறந்த திருவடியைப் போற்றி வழிபட விரும்புவதில்லை.*

*மேலும், தேவையில்லாதவற்றை பேசி தீவினைகளை மிகுவித்து மெலிகின்றீர். நான் உரைக்கின்ற வார்த்தைகளைக் கேட்டு வீணான உலகியல் எனும் கொடுமை நிறைந்த பொய் வழக்கங்களை விட்டு இறைவனிடம் வாருங்கள். என் ஒப்பிலாத தந்தையான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வருகின்ற தருணம் இது. ஆதலால் நீவீர் இறை இன்பத்தைப் பெறுவதற்கு உடனே வருவீர்களாக. நான் கூறும் இந்த வார்த்தை சத்தியமே என்று நம் எல்லவரையும் பெருமானார் அழைக்கிறார்.*

*மனித தேகம் முத்தியின்பம் பெறுவதற்கே எடுத்த தேகமாகும். இந்த தேகத்தில் மட்டுமே ஆன்ம விளக்கமும், அருள் விளக்கமும் மிகவும் விளங்குகின்றது என்பார் நம் வள்ளல் பெருமானார். இப்படிப்பட்ட உயர் அறிவுடைய இந்த தேகத்தை 'நான்' என்கிற அகந்தையினால் வீணாக்காமல் இவ்வகங்காரத்தை நீக்கும் குருவின் துணை கொண்டு உய்வோமாக.*

# மெய்ஞானக் கல்வி

இந்த ஸ்தூல உலகம் ஜடப் பொருட்களாலும், ஆற்றல்களாலும், அழுத்து விசையாலும், ஆகாயத்தாலும் நிரம்பி இருக்கிறது. உலகம் தோன்றிய காலம் முதல் மனித சமுதாயம் எத்தனையோ மாற்றங்களைக் கண்டிருக்கின்றது. நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நம் முன்னோர்களின் வசதி வாய்ப்புகள் குறைந்த வாழ்வை, இன்று நாம் வாழவில்லை. இன்று, எத்தனை எத்தனை தொழில்நுட்ப மாற்றங்கள்! அறிவியல் முன்னேற்றங்கள்! அன்றாடத் தேவைகளுக்கான பயன்பாட்டுப் பொருட்களிலிருந்து ஆரம்பித்து எல்லாவற்றிலும் அபரிமிதமான வளர்ச்சியைக் காண்கின்றோம். ஆனால், இவை யாவும் வெளி உலக முன்னேற்றமே.

வெளி உலகம் அறியாத, விஞ்ஞானத்தால் அறிந்துகொள்ள முடியாத ஓர் உலகம் உள்ளது. அது நமக்குள்தான் உள்ளது. வெளி உலகம் நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கான பொருட்களை உருவாக்கி வைக்கும். ஆனால், சந்தோஷத்தை நிர்ணயிப்பது நம் உள் உலகம்தான். இதற்கான ஒரு சிறு கதையை இங்கே காண்போம்.

ஒரு இளம் கணவனும் மனைவியும் ஒரு புது வீட்டிற்குக் குடி புகுந்தார்கள்.

முதல்நாள் காலை அவர்களிருவரும் சாப்பிடும்போது, அந்த இளம் மனைவி ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள். அங்கு பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைத்த துணிகளைக் காய வைப்பது தெரிந்தது.

மனைவி தனது கணவரிடம், “அந்தத் துணிகளைப் பாருங்கள். அழுக்காகவே இருக்கிறது. என்ன துவைத்திருக்கிறாள். நல்ல சோப்பு உபயோகிக்க மாட்டாள் போலிருக்கிறது” என்று கூறினாள்.

கணவன் எல்லாவற்றையும் பார்த்தான், கேட்டான், ஆனால் ஒன்றும் சொல்லவில்லை.

மறுநாளும், காலை அதேபோல சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, பக்கத்து வீட்டுப் பெண்மணி துணிகளைக் காய வைத்தார். அன்றும் மனைவி முதல் நாள் கூறியது போலவே கூறினாள். கணவன் சிரித்துக் கொண்டான். இது தினமும் தொடர்ந்தது.

*சில நாட்களுக்குப்பின் காலை உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்த மனைவி ஜன்னலின் வழியே பார்த்து ஆச்சரியத்துப் போனாள். தனது கணவனிடம், "அங்கே பாருங்கள். துணிகள் நன்றாக சுத்தமாக இருக்கின்றன. அந்தப் பெண்மணி துணிகளை சுத்தமாகத் துவைக்கக் கற்றுக் கொண்டாள்" என்று கூறினாள்.*

*கணவன் அமைதியாக, "நான் காலையில் சீக்கிரம் எழுந்து நம் வீட்டு ஜன்னலை சுத்தம் செய்தேன். அதுதான் வித்தியாசம்" என்றான்.*

நாம் பார்க்கும் மனிதர்கள், நிகழ்வுகள், செயல்கள் எல்லாவற்றின் குணாதிசயங்களுமே நாம் பார்க்கும் தன்மைக்கேற்பவே மாறுபட்டுத் தெரிகிறது. **இவையனைத்தையும் நம் உள் உலகமே தீர்மானிக்கிறது.**

இதனை, நம் வள்ளல் பெருமானும் உரைநடைப் பகுதியில் *"ஆன்ம அறிவு என்கிற கண்ணானது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளி மழுங்கினபடியாலும், அவைகளுக்கு உபகாரமாகக் கொண்ட மனம் முதலான உபநயனங்களாகிய கண்ணாடிகளும் பிரகாச பிரதிபலிதமில்லாமல் தடிப்புள்ளவைகளாக இருக்கின்றன"* என்கிறார்.

இவ்விதம் ஆராய்ந்து பார்க்கும்போது வெளிப் பொருட்கள் எத்தனை இருந்தாலும் நம் உள்உலகம் (மனம்) அழுக்கடைந்து இருந்தால் ஆனந்தத்தை அடைவதென்பது கடினம்.

இவ்வுண்மையை உணராமல் உலக மக்கள் அனைவரும் வெளியில் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டால் நாம் ஆனந்தத்தை அடைந்து விடலாம் எனத் தவறாக எண்ணி வீண்காலம் கழிக்கின்றனர். இதனையே ஒரு சித்தர்

**மனத்தகத்து அழுக்கறாத மவுனஞான யோகிகள்**
**வனத்தகத்து இருப்பினும் மனத்தகத்து அழுக்கறார்**
**மனத்தகத்து அழுக்கறுத்த மவுனஞான யோகிகள்**
**பிணத்தடத்து இருப்பினும் பிறப்பறுத்து இருப்பரே**

அதாவது, மனதில் அழுக்கு நீங்காதவர் காட்டில் எத்தனை கோடி ஆண்டுகள் வாழ்ந்தாலும் எந்த பயனும் இல்லை. மேலும், மன அழுக்கு நீங்கிய ஒருவர் பிணத்தின் பக்கத்தில் இருப்பினும் பிறப்பை அறுத்து வாழ்வர் என்கிறார்.

மேலும் இக்கருத்தை திருவள்ளுவப் பெருந்தகையும்

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற – அறன் வலியுறுத்தல் (குறள் 34)**

மனத்தின் அழுக்கை நீக்கி சுத்த மனமுடையோராய் வாழ்வதே எல்லா அறங்களிலும் சிறந்த அறம் என்கிறார்.

மேலும், கணிதம் எப்படிப் படிக்க வேண்டும், அறிவியல் எப்படிப் படிக்க வேண்டும், தமிழ், ஆங்கிலம் போன்ற பாடங்களை எல்லாம் எப்படி படிக்க வேண்டும் என்று கற்றுத்தந்த கல்வி முறை, **எப்படி நினைக்க வேண்டும் என்று கற்றுத் தந்திருக்கிறதா?** எண்ணம்போல் வாழ்வு என்றுதானே நம் பெரியோர்கள் அருளியுள்ளனர். நம் மனத்தால் எப்படி நினைக்க வேண்டும் என்றுதானே முதலில் கற்றுத் தந்திருக்க வேண்டும்.

இன்றைக்கு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி என எத்தனையோ கல்லூரிகள் உருவாகி எத்தனையோ மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்கி இருக்கிறது. ஆனால் எந்தக் கல்லூரி மனிதர்களை உருவாக்கி இருக்கிறது? அல்லது மனிதர்களை உருவாக்கும் கல்வி முறையோ அல்லது கல்லூரிகளோ உண்டா?

கத்தி என்பது ஒரு கருவி. அந்தக் கருவியிலோ அல்லது அந்த கண்டுபிடிப்பிலோ எந்த தவறும் இல்லை. அதைப் பயன்படுத்தும் மனித மனங்களைப் பொறுத்தே அது உயிர் வாங்கும் கருவியாகவும், உயிர் காக்கும் கருவியாகவும் விளங்குகிறது.

எவ்விதம் வாழ வேண்டும் என்பதற்காக இயற்றப்பட்ட திருக்குறளும், பிற ஞானிகளின் நூல்களும் இன்று வெறும் மதிப்பெண் எடுப்பதற்கும் மேடைகளில் பேசுவதற்கும் மட்டுமே பயன்படுத்தப்படும் அவல நிலை நிலவுகிறது. அதனை வாழ்வில் ஏற்று நடப்போர் வெகு சிலரே.

ஓர் அறிஞரின் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவத்தைக் அவர் வார்த்தைகளாலேயே காண்போம்.

"நான் மாணவனாக இருந்தபோது அந்த சம்பவம் நிகழ்ந்தது. இந்தியாவின் முதல் பிரதமர், நகருக்கு வருகை தருவதாக இருந்தது. அந்த ஜப்பல்பூர் நகரின் நடுவில், அழுக்கும், நாற்றமும் பிடித்த ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. நகரின் சாக்கடைகள் எல்லாம் அதில்தான் சங்கமம்!

அந்த நகரம் மிகப் பெரியது. போர்ட்லண்ட் நகரைவிடப் பத்து மடங்கு பெரியது. ஊரின் நடுவில் அந்தச் சாக்கடை நதி. குறுக்கே ஒரு பாலம். அதன் வழியாகச் செல்வது நரக வேதனை. அவ்வளவு நாற்றம் பிடித்த வேறு இடத்தை நான் கண்டதே இல்லை.

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அந்தப் பாலத்தைக் கடந்து செல்லவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. வேறு வழியே இல்லை. அதைக் கடந்துதான் நகரின் மற்ற பகுதிக்குச் செல்ல முடியும்.

அதனால், ஊர்க்காரரர்கள் நறுமணம் மிக்க மலர்களால் பாலத்தை அலங்கரித்தார்கள்! அது கோடை காலம். மலர்கள் மிகுந்த நறுமணத்துடன் பூத்திருந்தன. பாலத்தின் இரண்டு பக்கங்களிலும் மலர்ச் சரங்கள் ஏராளமாகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன.

அந்தப் பாலத்தைக் கடந்து செல்கிறவர்களுக்கு, அந்த மலர்ச் சுவருக்கு அப்பால், மகா மோசமான அழுக்குச் சாக்கடை இருப்பது தெரியவே தெரியாது.

நான் பல்கலைக் கழகத்திற்குப் போய்க் கொண்டிருந்தேன். அந்த நௌத்ரா பாலத்தைப் பலர் அழகுபடுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த பாலத்திற்கு ஒன்பது தூண்கள். ஒன்பது வாயில்கள் வழியாக சாக்கடை நீர் ஓடிக்கொண்டிருந்தது. அதனால்தான் அதற்கு சாக்கடை நதி எனப் பெயர்.

நானும் மலர் அலங்காரம் செய்பவர்களோடு சேர்ந்து கொண்டேன். நிறையபேர் வேலை செய்து கொண்டிருந்ததால் யாரும் என்னைத் தடுக்கவில்லை. நேரு வந்துவிடப் போகிறார் என்ற அவசரம் அவர்களுக்கு. பணியாட்களுடனும், தொண்டர்களுடனும் நான் சேர்ந்து கொண்டேன்.

நேரு, திறந்த ஜீப்பில் நின்றபடி ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார். நான் சட்டெனப் பாய்ந்து, ஜீப்பிற்கு முன்னால் சென்று, அதைத் தடுத்து நிறுத்தினேன்! வேறு எந்த இடத்திலும் அப்படி செய்திருக்க முடியாது. எங்கு பார்த்தாலும் இராணுவமும், போலீசும், பாதுகாப்புப் படையும் சூழ்ந்திருந்ததால் நெருங்கவே முடியாது.

பாலத்தின் மேல், தொண்டர்கள் மட்டும் இரண்டு பக்கங்களிலும் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். வேறு கூட்டம் எதுவும் இல்லை. யாரும் அங்கே வந்து நிற்கவும் விரும்ப வில்லை. கூடியிருந்தவர்கள், என்ன நடக்கிறதென்று கவனிப்பதற்குள் நான் பாய்ந்து விட்டேன்.

அந்தப் பாலம் சொர்க்கமாய் மணம் வீசியது! அந்தப் பாலத்தின் மேல் நின்று கொண்டிருந்தவர்களுக்குக் கொஞ்சம்கூட சாக்கடை நாற்றம் தெரியவே இல்லை.

நான் நேருவின் முன்னால் நின்று கொண்டு, "தயவு செய்து கீழே இறங்குங்கள்! இந்த மலர்களுக்கு அப்பால் நீங்கள் பார்க்க வேண்டும். அதுதான் இந்த நகரத்தின் எதார்த்த நிலைமை. உங்களை முட்டாளாக்கப் பார்க்கிறார்கள். உங்களை வரவேற்பதற்காக இந்த மலர்த் தோரணங்களைக் கட்டவில்லை. உங்களை ஏமாற்றுவதற்காகக் கட்டப்பட்டவை இவை," என்று கூறினேன்!

"நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார் அவர்.

"கீழே இறங்குங்கள்! இப்படி ஓரத்தில் வந்து இந்த மலர்களுக்கு வெளியே பாருங்கள்!" என்றேன்.

அவர் உணர்ச்சிபூர்வமான, புத்திசாலி மனிதர். உள்ளூர்ப் பிரமுகர்கள் அவரைத் தடுக்க முயன்றார்கள்.

"இந்த முட்டாள்கள் சொல்வதைக் கேட்க வேண்டாம். இவர்கள்தான் இந்த மலர்த்திரையைக் கட்டியவர்கள். உங்களை வரவேற்பதற்காக, இத்தனை மலர்கள் தொங்கவிடப்பட்டதை நீங்கள் வேறு எங்காவது பார்த்திருக்கிறீர்களா? இத்தனைக்கும் இங்கே மக்கள் கூட்டமும் இல்லை. இவர்கள் போட்ட சுலபமான கணக்கு இது. கீழே இறங்கிப் பாருங்கள்!" என்று சொன்னேன்.

அவர் கீழே இறங்கி வந்தார். என்னுடன் வந்து, மலர்ச் சரங்களை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தார்! அவரால் நம்பவே முடியவில்லை! அங்கிருந்த உள்ளூர்த் தலைவர்கள், மேயர், நகராட்சி உறுபினர்கள், தலைவர் ஆகியோரைப் பார்த்து, "இந்த இளைஞர் இப்படித் துணிச்சலாக இல்லாமலிருந்திருந்தால், உங்கள் ஊரின் உண்மை நிலையைக் காணாமல் தவறவிட்டிருப்பேன். இங்கே நீங்கள் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்களா?" என்றார் நேரு.

அப்புறம் அவர் என்னைப் பார்த்து, "நீ தில்லிக்கு எப்போதாவது வந்தால், என்னை வந்து பார்!" என்றார்.

"எப்போதாவதல்ல. உங்களை சந்திப்பதற்காகவே வருவேன். என்னை உள்ளேவிடச் சொல்லி, இந்த மடையர்களிடம் சொல்லுங்கள்!" என்றேன்!

*அவர் உடனே, தம் செயலாளரைப் பார்த்து, "இவரைப் பார்த்துக் கொள்; யாரும் இவரைத் தடுத்து விடாதபடி பார்த்துக் கொள்" என்றார்.*

*நான் எப்போது விரும்பினாலும் அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. நேருவின் இல்லக் கதவுகள் எப்போதும் எனக்குத் திறந்திருந்தன.*

*இந்நிகழ்வு அந்த அறிஞரின் மனதில் ஆழப்பதிந்திருந்தது. ஏனெனில், இதுபோன்ற அழுக்கு ஆறுதானே நமக்குள்ளும் ஓடிக்கொண்டிருக்கிறது. இதையறியாது நாம் வெளியில் மலர்களாலும், வாசனை திரவியங்களாலும் அலங்காரம் செய்து கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோமே என்று அவர் உள்ளுணர்வு அறிவுறுத்தியது. இதைத்தான் நம் வள்ளல் பெருமானாரும்*

**அகத்தே கருத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட**

*என்று திருஅருட்பா வரிகளில் மக்களின் உண்மை நிலையைச் சுட்டிக்காட்டுகின்றார்.*

*கண்ணாடியில் தன் முகத்தின் பிம்பத்தைப் பார்த்த குரங்கு வேறொரு குரங்கு எதிரில் இருப்பதாக எண்ணிக்கொள்வதுபோல் அழுக்கடைந்த மனக்கண்ணாடியின் மூலம் இவ்வுலகைப் பார்க்கின்ற நாம் இவ்வுலகம் அழுக்கடைந்துள்ளதாக எண்ணிக் கொள்கிறோம்.*

**எனவே, நம்முள் ஓடிக்கொண்டிருக்கும் அழுக்கு ஆறை (அழுக்காறை) நாம் சுத்தம் செய்தால்தான் உள் உலகம் சமநிலை அடையும். அப்போதுதான், இந்த வெளி உலக வாழ்வு என்றென்றும் மணம் வீசும் பூந்தோட்டமாக மாறும்.**

**சுகமறியீர் துன்பம்ஒன்றே துணிந்தறிந்தீர் உலகீர்**
**சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மைஅறிந் திலிரே**
**இகம்அறியீர் பரம்அறியீர் என்னேநும் கருத்துஈது**
**என்புரிவீர் மரணம்வரில் எங்குறுவீர் அந்தோ**
**அகமறியீர் அனகம்அறிந்து அழியாத ஞான**
**அமுதவடிவம் பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே**
**முகமறியார் போலிருந்தீர் என்னை அறியீரோ**
**முத்தரெலாம் போற்றும் அருட் சித்தர்மகன் நானே. – ஞான சரியை**

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுக

**மனாதிகள் பொருந்தா வானடு வானாய்**
**அனாதி உண்மையதாய் அமர்ந்த மெய்ப்பொருளே (அகவல் 898)**

| | | |
|---|---|---|
| மனாதிகள் | - | மனம் முதலிய கரணங்களுக்கு |
| பொருந்தா | - | எட்டாத |
| வான் நடு வானாய் | - | சிதாகாயத்தின் நடுவே நின்ற பரமாகாயமாய் |
| அனாதி உண்மையதாய் | - | ஆதியந்தம் இல்லாத உண்மையாய் |
| அமர்ந்த மெய்ப்பொருளே | - | விளங்கும் மெய்ப்பெருளே |

மனாதிகள் என்றதால் வாக்கு போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மனதிற்கும் வாக்கிற்கும் இன்னும் இவை போன்றவற்றிற்கும் எட்டாத ஞான ஆகாயமாய்த் திகழ்வது ஆதியந்தம் இல்லா மெய்ப்பொருள். அதாவது மனதினால் பலகால் நினைத்தாலும், வாக்கினால் பலகால் புலம்பினாலும், கண் முதலான தேகேந்திரியங்களைக் கொண்டோ அறிந்து கொள்ள முடியாத மெய்ப்பொருள் அருட்பெருஞ்ஜோதி.

---

**தானொரு தானாய்த் தானே தானாய்**
**ஊனுயிர் விளக்கும் ஒருதனிப் பொருளே (அகவல் 900)**

| | | |
|---|---|---|
| தான் ஒரு தானாய் | - | தனக்குத் தானே நிகராய் |
| தானே தானாய் | - | கலப்பின்றி தானே தானாய் இருப்பவன் |
| ஊன் உயிர் | - | உலகத்திலுள்ள உயிர்களையும் உடம்புகளையும் |
| விளக்கும் | - | விளக்கி அருளும் |
| ஒரு தனிப் பொருளே | - | ஒப்பற்ற பரம்பொருளே |

பரம்பொருள், தனக்குத் தானே ஒப்புயர்வு அற்றதாயும், கலப்பின்றி சுயம்பு மூர்த்தியாயும் விளங்குகின்றது. உயிர்களும் அவற்றின் உடம்புகளும் அப்படியன்று. உடம்புகள் உயிரைச்

சார்ந்து விளங்கும்; உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாக விளங்கும். பாசத்தைச் சாரும்போது பாசங்களில் கிடந்து உழலும். பதியைச் சார்கின்றபோது பதிநிலை எய்தும்.

ஆக, ஒப்பற்ற பரம்பொருளாகிய அருட்பெருஞ்ஜோதியே தனக்குத் தானே ஒப்புயர்வு அற்றதாயும், கலங்கமில்லாத சுயம்பு மூர்த்தியாயும் நின்று ஜீவர்களின் உடம்புகளையும், உயிர்களையும் விளங்கச் செய்விக்கும்.

ஊனின்றி உயிர் இயங்காது. உயிரின்றி ஊன் இயங்காது. ஊன் என்பது தூலம் (உருவம்); உயிர் என்பது சூக்குமம் (அருவம்). உடம்பு ஒரு பொருள். உயிர் என்பது ஆற்றல்.

தூல உடம்பை சூக்குமமாக்கி **'ஊன் என்றும் உயிர் என்றும் குறியாமே முழுதும் ஒருவடிவாம் திருவடிவம்'** பெறவேண்டும். பொருளாக இருக்கும் உடல் ஆற்றலாக மாறவேண்டும். உடம்பு உயிரின் நிலையைப் பெற்று, உயிர் இறைவனின் நிலையைப் பெறவேண்டும். பருஉடல் அருஉடலாகி, உயிர் பரமாகி, உடம்பும் உயிரும் ஒழிவற ஒன்ற வேண்டும். உடம்பும் உயிரும் இந்நிலை எய்தின் நாமும் தானொரு தானாய் தானேதானாய் ஒருதனிப் பொருளாய் (பரம்பொருளாய், மெய்ப்பொருளாய்) விளங்கலாம். இவ்விளக்கத்தை ஊன் உடம்போடு வாழும் உயிர்களுக்கு அருளுவது அருட்பெருஞ்ஜோதி.

...திருச்சிற்றம்பலம்...

**அருளின் தன்மை எத்தகையது?**

நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்தினுக்கு நன்மை தீமையை விளக்கிக் காட்டுவதாயும், வேத ஆகமக் கலைகளைக் கொண்டு நன்மையாதிகளை விதிப்பதாயும், அறிபவர்களின் தரத்திற்கு ஒத்ததாயும், அறிபவர்கள் எந்த வஸ்துவை அறிகின்றார்களோ அந்த வண்ணமாயும் உள்ளது.

**- திருஅருட்பா வசனபாகம்**

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# திருமந்திரத் தேன்



**சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவந்**
**தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு**
**சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க்**
**கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே.** **– யார் சன்மார்க்கி?**

*ஆன்மாவாகிய தானும் சிவமும் வேறல்ல என உணரும் நிலையை எய்துவிப்பதே சன்மார்க்கமாம். வேதத்தில் ஒளி விளங்க ஏத்தப் பெறும் அச்சிவத்தின் பல்வேறு வடிவங்களான தெய்வங்களைக் கண்டு மகிழ்ந்து, கோபம் முதலிய ஆறு பகைகளை வென்று, சிவயோகம் புரியும் சித்தராய் விளங்கி, இறப்பை வென்றவரே சன்மார்க்கத்தின் கருத்தை (அனுபவத்தை) அறிந்தோர்.*

**கானுறு கோடி கடிகமழ் சந்தனம்**
**வானுறு மாமல ரிட்டு வணங்கினும்**
**ஊனினை நீக்கி உண்பவர்க் கல்லது**
**தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே.** **– கிரியை**

*மண்ணும் விண்ணும் ஆகிய எங்கனும் நறுமணம் கமழும் சந்தனமும், அத்தகைய சிறந்த மணம் கமழும் நறுமலரும் கைக்கொண்டு நாளும் வழிபட்டாலும் தம்மை அடிமை என்று கொண்டு கொல்லாமலும் கொன்றதைத் தின்னாமலும் இருப்பதாகிய செந்நெறியொழுகிச் சிவனை நினைப்பதாகிய திருவுடையார்க்கன்றி திருவருள் வீழ்ச்சியாகிய சத்திநி பாதம் கிட்டாது. சத்தி – திருவருள். நிபாதம் – நன்றாய்ப் பதிதல்; வீழ்ச்சி.*

**கிடக்கும் உடலிற் கிளரிந் திரியம்**
**அடக்க லுறுமவன் தானே யமரன்**
**விடக்கிரண் டின்புற மேவுறு சிந்தை**
**நடக்கின் நடக்கும் நடக்கு மளவே** **– ஐந்திந்திரியம் அடக்கு முறைமை**

*அனைத்து உயிரும் நன்னெறி எய்தும்பொருட்டுச் இறைவனால் அமைந்தருளப்பட்ட உடம்பின்கண் காணப்படும் பொறிகள் அந் நன்மைக்குத் துணையாகவே அமைக்கப்பட்டன.*

*மலச்சார்பினால் அவைகள் தீயவழிகளில் கிளர்கின்றன. அவ் வழியில் நாமும் சென்று விடாது நலச்சார்பால் ஐம்புலனும் நம்மைப்*

பின்தொடரும் தகையினராய் ஒழுகுதல் வேண்டும். அங்ஙனம் ஒழுகுதலாவது தம்மைச் இறைவன் திருவடிக்கே ஒப்படைத்து மீளா அடிமையாய் வாழ்தல். இதுவே புலனடக்கமாகும். இத்தகைய புலனடக்கமுள்ளவரே புலவராவர். அப்புலவரால் விரும்பப்படுபவரே அமரராவர். உடம்பாகிய விடக்கின்கண் அருந்தல் பொருந்தல்களாகிய இரண்டின்பத்தினும் ஈடுபாடுற்று உள்ளம் சென்று நடந்தால் உயிர்ப்பு வீணாகும். அவ்வுயிர்ப்பு நடக்கும் வரை உடலும் நடக்கும்.

அமரர் – விரும்பத்தக்கவர். அமர்வு – விருப்பம்.

**கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வர்**
**கண்காணி யில்லா விடமில்லை காணுங்காற்**
**கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்**
**கண்காணி கண்டார் களவொழிந் தாரே.**

**–அவனுக்கு எங்கும் கண்**

மாந்தர் தாம் செய்வதை ஒருவரும் மேற்பார்க்கவில்லை என்று வஞ்சனை பலவும் செய்வர். மேற்பார்ப்பவன் இறைவன். அவன் இல்லாத இடமே இல்லை. எவ்விடத்திலும் உள்ள பொருள்கள் தனக்கே உரிமை என்னுமாறு அவன் அவற்றை உண்ணின்று இயக்குகிறான். தம்முடைய புருவத்திடைக் கண்ணால் அவனைக் கண்டோர் வஞ்சனை செய்யார்.

**திருச்சிற்றம்பலம்**

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பு உள்ளங்களே! கடந்த 11 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் **8012680865**

**திருச்சிற்றம்பலம்**

**Advertisement**


## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS ∝

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
| --- | --- |
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

**வள்ளல் பெருமானார் அருளிய சுத்த சன்மார்க்கக் கொள்கைகள்**
**மற்றும் வாழ்வியல் நெறிமுறைகளை விளக்கும்**

# சன்மார்க்க வாழ்வியல் பயிற்சி முகாம்




## ஆகஸ்ட் 18 & 19 2018 சனி & ஞாயிறு

**இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,**
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம், பொள்ளாச்சி.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)
உடுமலைபேட்டையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:00க்கு)

## இப்பயிற்சி முகாமில்:–

- சன்மார்க்க ஞான சத்சங்கம்
- ஜீவகாருண்ய ஒழுக்க நெறிமுறைகள்
- ஜோதி தியானம்
- ஞான மூலிகை ரகசியங்கள்
- ஜோதி வழிபாடு
- திருவருட்பா பாராயணம்

**போன்றவை நடைபெறும்.**

## சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி

1. அன்பர்கள் ஆகஸ்ட் 17 வெள்ளி இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் எடுத்துவரவும்.
3. ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்துவரவும்.
4. நோட்டு, பேனா, தண்ணீர் பாட்டில் மற்றும் ஏர் பில்லோ எடுத்துவரவும்.
5. ஆகஸ்ட் 19 ஞாயிறு மாலை 5:00 மணிக்கு பயிற்சி முடிந்துவிடும்.

**பயிற்சியில் இரண்டு நாட்களும் கலந்து கொள்வோருக்கு மட்டுமே அனுமதி**

**முன்பதிவிற்கு: 88385 40176, 99427 76351**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly July 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

**பெங்களூரில்...**

# அருள் பூரண சித்தி யோகம்

**ஒரு நாள் தியான முகாம்...**

எங்கே கருணை இயற்கையின் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே – அகவல்

**தியானம், யோகம், சத்சங்கம், ஜீவகாருண்யம், பக்தி...**

**இவற்றில் மூழ்கி திளைத்திட ஓர் அரிய வாய்ப்பு**

**நாள்: ஆகஸ்ட் 5, ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்:** காலை **6:30** மணி முதல் இரவு **7:00** மணி வரை

**இடம்: கஷ்மீர் பவன்,** 108, லால் லே அவுட்,
ஜெயநகர் 4வது T பிளாக், பெங்களூரு – 560041.
Near Carmel Convent or Behind jalabhavan.

**முன்பதிவு அவசியம்: 88385 40176, 89403 96760**

**இப்பயிற்சியில் உள்ளூர் & வெளியூர் அன்பர்களும் கலந்துகொள்ளலாம்**
**பயிற்சியில் ஒரு நாள் முழுவதும் அவசியம் கலந்துகொள்ளவேண்டும்**

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

**சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865**